வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

**தேதி: 15.08.2025 நேரம்: மாலை 6.10 மணி**

---

தலைப்புச்செய்திகள்

நாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழா இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

இளைஞர்களுக்கு 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வேலை வாய்ப்பு திட்டம் இன்று முதல் செயல்படுத்தப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்தள்ளார்.

அரவிந்தரின் பிறந்த நாளை முன்னிட்டு ஆரோவில்லில் போன் பயர் ஏற்றப்பட்டு கூட்டு தியானம் நடைபெற்றது.

புதுச்சேரி கடலூர் தேசிய நெடுஞ்சாலையை மேம்படுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தமது சுதந்திர தின உரையில் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினம் மோடி 1 (4)

நாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழா இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. டெல்லி செங்கோட்டையில் 12 ஆவது முறையாக பிரதமர் திரு நரேந்திர மோடி தேசிய கொடி ஏற்றினார். முன்னதாக, அவர் முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை

ஏற்றுக்கொண்டார். ஆபஷேன் சிந்தூர் துல்லியமான தாக்குதலில் ஈடுபட்ட போர் வீரர்களுக்கு வணக்கம் செலுத்தி பிரதமர் தமது உரையை துவக்கினார். அப்போது அவர், முப்படைகளின் ஆற்றல் மிகு துணிச்சல் ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு காரணமாக அமைந்ததாக பெருமிதம் தெரிவித்தார். இதுகுறித்த கூடுதல் விவரங்கள்........

**(வாய்ஸ்)**

சுதந்திர தினம் மோடி 2 (16)

**வாய்ஸ்**

அணுசக்தி அச்சுறுத்தலை இந்தியா சகித்துக்கொள்ளாது என தெரிவித்த பிரதமர், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் சக்தி வாய்ந்த ஆயுதங்களை உருவாக்கும் விதத்தில், சுதர்ஷன் சக்ரா என்ற இயக்கம் தொடங்கப்படும் என்றார். அடுத்த 10 ஆண்டுகளில் நம் நாட்டில் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டு, நவீனமாக்கப்படும் என்றும் அவர் கூறினார். வளர்ச்சியடைந்த பாரதத்தின் முக்கிய அம்சமாக சுய சார்பு பாரதம் திகழ்வதாக தெரிவித்த அவர், இந்த சுதந்திர தினத்தன்று 1 லட்சம் கோடி மதிப்பிலான வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான, வேலை வாய்ப்பு திட்டம் இன்று முதல் செயல்படுத்தப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார். இதன் மூலம் தனியார் துறையில் புதிதாக வேலையில் சேரும் வீரர்கள், மாதந்தோறும் 15 ஆயிரம் ரூபாய் பெறுவார்கள் என்றும், இத்திட்டத்தின்

கீழ், 3 கோடி இளைஞர்கள் பயன்பெறுவார்கள் என்றும் குறிப்பிட்டார். செமி கண்டக்டர் துறையில் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ், சிறப்பான முன்னேற்றம் அடையும் என்றும், இதன் மூலம் புதிய தகடுகள் உருவாக்கப்படுவதோடு, செயற்கை நுண்ணறிவு, சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் முன்னேற்றம்

சுதந்திர தினம் மோடி 3 (18)

அடையும் என்றும் எடுத்துரைத்தார். விவசாயிகளின் நலன்களில் அரசு ஒருபோதும் சமரசம் செய்துக்கொள்ளாது என தெரிவித்த பிரதமர், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அரணாக அரசு திகழும் என்று உறுதி அளித்தார். சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்று திரும்பியுள்ள திரு சுபான்ஷீ சுக்லாவை பாராட்டிய பிரதமர், ககன்யான் விண்வெளி திட்டம் முழு வீச்சில் செயல்படுத்தப்படுவதாக கூறினார். அனைத்து துறைகளிலும் நாடு சுயசார்பை அடையவும், உள்ளூர் உற்பத்தி பொருட்களை பயன்படுத்தவும் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட முக்கிய பிரபலங்கள் குரல் கொடுக்க வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சுதந்திர தின உரையில் கேட்டுக்கொண்டார். முன்னதாக, பிரதமர் இன்று காலை ராஜ்கட்டில் மகாத்மா காந்தியடிகள் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

அரவிந்தர் (16)

மகான் ஸ்ரீ அரவிந்தரின் பிறந்த நாளை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா ஆகியோர் புகழஞ்சலி செலுத்தினர். பிரதமர் திரு நரேந்திர மோடி தனது சமூக ஊடகப்பதிவில், ஸ்ரீஅரவிந்தரின் தத்துவம், ஆன்மீகம் மற்றும் தேசப்பற்று ஆகியவை நாட்டு மக்களுக்கு உத்வேகம் அளிப்பதாகவும், அவரது எண்ணங்கள், குடிமக்களின் திறனை உணர்த்தி வலுவான இந்தியாவை உருவாக்க தூண்டும் என தாம் நம்புவதாக தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியை அடுத்த சர்வதேச நகரமான ஆரோவில்லில் அரவிந்தரின் பிறந்த நாளை முன்னிட்டு அன்னையின் இல்லம் என அழைக்கப்படும் மாத்திர் மந்திர் அருகில் இன்று அதிகாலை போன்பயர் தியான நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வெளிநாட்டினர் மற்றும் சுற்றுலா பயணிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு தியானத்தில் ஈடுபட்டனர். ஆரோவில் உதய தினம் மற்றும் அரவிந்தர் பிறந்த தினத்தில் மட்டுமே போன்பயர் நிகழ்ச்சி நடைபெறுவது குறிப்பிடத் தக்கது.

புதுச்சேரியில் உள்ள அரவிந்தர் ஆசிரமத்தில் அரவிந்தர் பயன்படுத்திய அறை பொதுமக்கள் தரிசனத்திற்காக இன்று திறக்கப்பட்டது.

மேக வெடிப்பு (12)

உத்ரகாண்ட் மற்றும் இமாச்சலபிரதேசத்தை தொடர்ந்து ஜம்மு-காஷ்மீரில் மேக வெடிப்பால் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி 45

பேர் பரிதாபமாக உயிரிழந்த நிலையில், மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதுவரை 120 க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் 38 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது. ஏராளமானோர் காணவில்லை என்றும், இடிபாடுகள் மற்றும் சேற்றில் பலர் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என தெரிகிறது. இச்சம்பவம் குறித்து குடியரசு தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள், அம்மாநில முதலமைச்சர் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். நிலைமையை சமாளிக்க சண்டிகரில் இருந்து மருத்துவ நிபுணர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் அடங்கிய சிறப்பு குழு ஜம்முவிற்கு விரைந்துள்ளது.

வீராம்பட்டினம் தேர் (12)

புதுச்சேரி வீராம்பட்டினத்தில் உள்ள பிரசித்திப்பெற்ற செங்கழுநீரம்மன் ஆலயத்தில் ஆடித்திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற திருத்தேர் விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டு தேரினை வடம் பிடித்து இழுத்து தொடக்கி வைத்தனர். இதில் சபாநாயகர் திரு செல்வம், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் உட்பட பல பகுதிகளில

இருந்தும் ஏராளமான பக்தர்கள் தேர் திருவிழாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்த கோவிலின் தேர்திருவிழா பிரெஞ்ச் ஆட்சிக் காலம் முதலே ஆளுநர் தேரை வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தை தொடங்கி வைப்பது வழக்கம் என்பது குறிப்பிடத் தக்கது.

புதுச்சேரி சுதந்திர தினம் 1 (17)

புதுச்சேரியிலும் நாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. கடற்கரை சாலையில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து காவல் துறையின் பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட காவலர்களுக்கு குடியரசு தலைவரின் காவல் பதக்கம், முதலமைச்சரின் காவல் பதக்கம் உள்ளிட்ட பதங்கங்கள் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். மேலும், கடந்த ஆண்டின் சிறந்த காவல் நிலையமாக தேர்வு செய்யப்பட்ட காரைக்காலில் உள்ள டிஆர் பட்டினம் காவல் நிலையத்திற்கு விருது மற்றும் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. தொடர்ந்து காவல்துறை, மாணவர் படை உள்ளிட்ட பல்வேறு பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார். பள்ளி மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது. இவ்விழாவில் திரு சபாநாயகர் செல்வம், அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் திரு சிவா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயலர்

டாக்டர் சரத் சவுகான், அரசு துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இதனிடையே, சுதந்திர தின உரையாற்றிய

*புதுச்சேரி சுதந்திர தினம் 2 (11)*

முதலமைச்சர் திரு ரங்கசாமி, புதுச்சேரி மரப்பாலத்தில் இருந்து முள்ளோடை வரையுள்ள கடலூர் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், 50 எம்எம்டி கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டம், 50 கோடி ரூபாயில் தொடங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், புதுச்சேரி சுதந்திர போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியம் 12 ஆயிரம் ரூபாயில் இருந்து 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும், பெண் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் அரவணைப்பு திட்டத்தின் கீழ் புதிதாக 5 ஆயிரத்து 884 பெண் குழந்தைகளுக்கு இதுவரை, 50 ஆயிரம் வீதம் 29.42 கோடி ரூபாய் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில்.......

**வாய்ஸ்**

*புதுச்சேரி சுதந்திர தினம் 3 (15)*

புதுச்சேரி பிராந்தியமான ஏனாமில் ஜிஎம்சி பாலயோகி மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் கலந்து கொண்டு தேசிய

கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் புதுச்சேரிக்கான டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணாராவ், சட்டமன்ற உறுப்பினர் திரு கொல்லப்பள்ளி ஸ்ரீநிவாச அசோக் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்ததாக எமது ஏனாம் நிருபர் தெரிவித்தார்.

இதேபோல், காரைக்காலில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகனும், மாகேவில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், அமைச்சர் திரு ஜான்குமாரும் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்தனர்.

ஆகாஷ்வாணி புதுச்சேரியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் நிலைய இயக்குநர் திருமதி லட்சுமி தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நிகழ்ச்சி பிரிவு தலைவர் மயிலாடுதுரை த செந்தில்குமார், செய்திப்பிரிவு தலைவர் திரு பிபின் நாத் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி சுதந்திர தினம் 4 (7)

இந்திய அரசின் நவரத்தின நிறுவனமான என்எல்சி இந்தியா நிறுவனத்தில் கொண்டாடப்பட்ட சுதந்திர தின விழாவில் அதன் தலைவர் மற்றும் மேலான் இயக்குநர் திரு பிரசன்னகுமார் மோட்டுபள்ளி தேசிய கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். முன்னதாக, என்எல்சி இந்தியா நிறுவனத்தின் மனித வள இயக்குநர் திரு

சமீர் ஸ்வருப் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியின் போது பல்வேறு பிரிவுகளின் கீழ் விருதுகள் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.

*போதையில்லாத இந்தியா (12)*

மத்திய அரசு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படும் போதை இல்லா இந்தியா திட்டத்தின் கலந்தாய்வு கூட்டம் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. மாவட்ட துணை ஆட்சியர் திரு அர்ஜுன் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கிய கூட்டத்திற்கு பேரிடர் மேலாண்மை துறை துணை மாவட்ட ஆட்சியர் வேங்கட கிருஷ்ணன், சென்னை ஐஐடி யின் மானிடவியல் மற்றும் சமூக அறிவியல் துறை இணை பேராசிரியர் டாக்டர் சந்தோஷ்குமார் சாகு, காவல் கண்காணிப்பாளர் திரு சுப்பிரமணியன், அரசு பொது மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் கண்ணகி உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். போதை பொருள் ஒழிப்பு குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்து.

*சட்டபூர்வ பரிமாற்ற நாள் (8)*

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 16 ஆம் தேதி புதுச்சேரி கீழூர் நினைவு மண்டபத்தில் சட்டபூர்வ பரிமாற்ற நாள் கொண்டாடப்படும். அந்த

வகையில், நாளை நடைபெற உள்ள விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி கீழூர் வாக்கெடுப்பில் கலந்து கொண்ட சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகத்தை போற்றும் விதமாக தேசிய கொடியை ஏற்றி வைக்க உள்ளார். இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், வேளாண் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார் ஆகியோரும் பங்கேற்க உள்ளதாக செய்தி மற்றும் விளம்பரத் துறை சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*வானிலை* (6)

வடமேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடலில் நிலவி வரும் காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று வீசக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*இந்தியாவின் ஏற்றுமதி* (5)

மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் தரவுகளின் படி, இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி ஜூலை மாதத்தில்

வலுவான முன்னேற்றத்தை அடைந்து சுமார் 7.3 சதவிகிதம் அதிகரித்து 37.24 பில்லியன் டாலர்களாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், இறக்குமதியில் 8.6 சதவிகிதம் உயர்ந்து 64.59 பில்லியன் டாலர்களாக உள்ளது.

மீண்டும் இன்றைய முக்கிய செய்திகள்

நாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழா இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

இளைஞர்களுக்கு 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வேலை வாய்ப்பு திட்டம் இன்று முதல் செயல்படுத்தப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்தள்ளார்.

அரவிந்தரின் பிறந்த நாளை முன்னிட்டு ஆரோவில்லில் போன் பயர் ஏற்றப்பட்டு கூட்டு தியானம் நடைபெற்றது.

புதுச்சேரி கடலூர் தேசிய நெடுஞ்சாலையை மேம்படுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தமது சுதந்திர தின உரையில் தெரிவித்துள்ளார்.